**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. வைரமூர்த்தி
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.

**08/08/2019.**

**S.C.No.110/2019** **PW** 12 Tr. வைரமூர்த்தி

**முதல் விசாரணை**

நான் முதுநிலை வருவாய் அலுவலர் ஆக பணிபுரிந்து 30.04.2019 ஓய்வு பெற்று, இராயப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் சென்னை மாவட்டம் எழும்பூர் வட்டத்தில் வருவாய் ஆய்வாளர் ஆக பணியாற்றி வந்தேன். 26.9.2014ந் தேதியன்று CBCID Cr.No.4/2004 வழக்கு சம்பந்தமாக எதிரிகளிடம் வாக்குமூலம் பெறுவதற்காக அரசு சாட்சிகளாக இரண்டு அலுவலர்களை அனுப்பி வைக்க CBCID ஆய்வாளர் கேட்டு கொண்டதின் பேரில் 27.9.2014ந் தேதியன்று மதியம் 2.00 முதல் 5.00 மணி வரை அயத்பாஷா என்பவரிடம் 28.9.2014ந் தேதியன்று லட்சுமணன் என்பவரிடமும் அதை தொடர்ந்து 13.11.2014ந் தேதியன்று சேட்டு என்கறி ஜீவானந்தம் என்பவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, CBCID ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யபட்டு, அப்போது நான் அவருடன் இருந்தேன். அயத்பாஷா என்பவரிடம் வாக்குமூலம் பெறும்போது, அயத்பாஷா சொன்ன வாக்குமூலத்தில் அவருடைய நண்பர் லட்சுமணன் என்பவர் 01.09.2014ந் தேதியன்று டாடா சுமோ மூலம் மதுரைக்கு சென்றதாகவும், கண்ணன் என்பவரிடம் இண்டிகா வண்டியை பற்றி சொல்லிருப்பதாகவும், அந்த வண்டியை எடுத்து கொண்டு மதுரை வருமாறு கூறினார். அவர் சொன்னபடி 01.09.2014ந் தேதி மாலை டாடா இண்டிகாவை வாங்கி கொண்டு மதுரைக்கு புறப்பட்டு சென்றதாகவும், லட்சுமணன் கூறியபடி திருச்சி பைப்பாஸ் சென்று லட்சுமணன் போன் செய்ததாகவும், லட்சுமணன் ஒரு நபர் வருவார் அவரை பார்த்துவிட்டு வருமாறு வாக்குமூலம் அளித்ததாகவும், திருச்சி பைப்பாஸ் வந்ததும், பல்சர் வண்டியில் வந்த ஒரு நபர் ரூ.5,000 கொடுத்ததாகவும், அதை பெற்றுக் கொண்டு லட்சுமணன் மதுரைக்கு 2.9.2014ந் தேதியன்று லட்சுமணனை மதுரையில் சந்ததித்தாகவும், மதுரைக்கு அருகில் உள்ள இருட்டுங்குடி மாரியம்மன் கோவில் அங்கு லட்சுமணனை பார்த்தாகவும், அங்கு லட்சுமணனுடன்இருந்த செல்வகுமார், செல்வம், லோகநாதன் , சேட்டு, ராசு மற்றும் ஒரு சேட்டு ஆகியோர்களை அறிமுகமபடுத்தியதாகவும், அவர்கள் அனைவரும் தூத்துகுடி Sperlight Company லிருந்து Copper தகடுகளை ஏற்றி வரும்

டிரைலர் லாரிகளை தொடர்ந்து வருவதாக பேசி கொண்டதாகவும், அதன் படி மதுரை , திண்டுக்கல் சாலையில் வந்து கொண்டு வந்த டிரைலர் லாரிகளை பின் தொடர்ந்ததாகவும், அந்த டிரைலர் லாரிகள் ஒரு பெட்ரோல் பங்கில் இரவு நிறுத்தி அங்கே தங்கியதாகவும், இவர்களும் அங்கேயே தங்கிவிட்டதாகவும், மீண்டும் 03.09.2014ந் தேதியன்று அந்த டிரைலர் லாரிகளை பின் தொடர்ந்து சென்றதாகவும், இறுதியாக சென்ற டிரைலர் லாரி எம் எச் 04 எஃப் யூ 6952 என்ற வண்டியை கடத்த முடிவு செய்ததாகவும், டாடா சுமோவில் இருந்த செல்வம் என்பவர் இண்டிகா வண்டியில் இருந்த தாஸக்கு போன் செய்து ஆர் டி ஓ செக் போஸட் தாண்டி நியூட்டன் செய்து நிறுத்தம்படியும் கூறினார். டாடா சுமோவில் சென்றவர்கள் அந்த டிரைலர் லாரியை ஓரங்கட்ட சொல்லி செய்கை காண்பிக்க டிரைவர் ஓரங்கட்டி டாடா சுமோவில் இருந்து இறங்கி வந்து, ஆவணங்களை டாடா சுமோவில் இருந்த செல்வத்திடம் காண்பித்துள்ளார். அப்போது, செல்வம் டிரைவரை வண்டிக்குள் இருந்து கத்தியை காட்டி மிரட்டி அவரிடம் இருந்த ரூ.10,000/-தை பிடிங்கியதாகவும், பின்னர் இண்டிகாவில் இருந்த தாஸக்கு போன் செய்து டிரைவரையும் லாரியையும் தூக்கியாச்சு பின் தொடர்ந்து வாருங்கள் என சொல்லவிட்டார். அதன்படி, கொம்பிடி என்ற இடத்தில் சந்தித்ததாகவும், டாடா சுமோ வண்டியும் அங்கிருந்தாகவும், செல்வம் என்பவர் ரூ.10,000 கொடுத்து லட்சுமணனையும் தாஸையும் டாடா சுமோவில் செட்டில்மெண்ட் செய்து விட்டு வர சொன்னார்கள். டிரைலர் லாரியை செல்வகுமார் மற்றும் சேட்டு என்பவரும் லாரியை எடுத்து கொண்டு சென்னைக்கு சென்றதாகவும், மற்ற நபர்கள் இண்டிகாவில் ஏறி நாளு ரோடு வழியாக சென்றபோது செல்வமும் லோகநாதனும் அருரில் இறங்கி சென்னை போவதாக சொன்னார்கள் என்றும், லட்சுமணன், தாஸ், அயத்பாஷா ஆகியோர்கள் டிரைவரை கடத்தி கொண்டு ஒரு தோப்பில் வைத்ததாகவும், 3ந் தேதி இரவு அங்கேயே தங்கி இருந்ததாகவும், 4ந் தேதி காலையில் டிரைவருக்கு உடல்நிலைசரியில்லாததால் அவரை அனுப்பி வைக்க முடியு செய்து, டிரைவருடன் ரூ.1,300/ கொடுத்து அனுப்பிவிட்டதாகவும், தாஸ் சென்னை செல்வதாக சென்றுவிட்டதாகவும், செல்வம், லட்சுமணன், தாஸ் என்பவருக்கு போன் செய்து போலிசாருக்கு தகவல் தெரிந்திருப்பதாகவும்,. அனைவரும் சென்றுவிடுங்கள் என சொன்னதாகவும், வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். லட்சுமணன் , அயத்பாஷா, சேட்டு

அவர்களிடம் வாக்குமூலம் வாங்கினார். 16.09.2014ந் தேதி விடியற்காலையில் தொப்பூர் போலிசார் சென்னை ஆர் 11 போலிசாரிடம் இத்தொழிலுக்கு பயன்படுத்திய வாகனங்களையும், அயத்பாஷா, லட்சுமணன் என்பவர்களையும் ஒப்படைத்ததாகவும், சி பி சி ஐ டி போலிசார் விசாரணை செய்து 18.09.2014ந் தேதியன்று பூந்தமல்லி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஆஜர் செய்து சிறையில் அடைத்தார்கள் என்றம், வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். மேற்படி 3 நபர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தபோது நான் உடன் இருந்தேன். என்னிடம் காட்டபடும் எதிரி லட்சுமணன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ11 ஆகும். எதிரி மதன் என்பவரை ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ12 ஆகும். என்னிடம் காட்டபடும் எதிரி மதன்ராஜ் சம்பந்தபட்ட (ரீடு சான்றிதழ்) கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ13 ஆகும். அதை எதற்காக கையொப்பம் செய்தேன் என்று ஞாபகம் இல்லை. சாட்சி தற்போது எதற்காக கையொப்பம் செய்தார் என்று கேட்டதற்கு லட்சுமணனிடம் கைப்பற்றபட்ட பொருட்களுக்காக கையொப்பம் செய்தேன் என்று சொல்கிறார். என்னிடம் காட்டபடும் கைப்பற்றுதல் மகசர் (ரூ.10,000/-) கைப்பற்றியதற்கான மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ14 ஆகும். சாட்சி தற்போது ஆவணத்தை பார்த்துவிட்டு லட்சுமணன் என்பவரிடம் பணம் கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ளார். என்னிடம் காட்டபடும் எதிரி மதன்ராஜ் சம்பந்தபட்ட இரு சக்கர வாகனத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அசாஆ 15 ஆகும். என்னிடம் காட்டபடும்எதிரி சேட்டு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 16 ஆகும். என்னிடம் காட்டபடும் அயத்பாஷா என்பவரின் ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 17 ஆகும். அயத்பாஷா, லட்சுமணன், சேட்டு என்கிற ஜீவனாந்தம், மதன் ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது நான் உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் மேற்கூறிய விபரங்களை ஆய்வாளர் தான் விசாரித்தார்.

**எ1 , எ2, எ5 தரப்பில் குறுக்கு விசாரணை மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**6 மற்றும் 8 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வருவாய் ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது மேல் அதிகாரி தாசில்தார் ஆவார். எங்கள் விதிமுறைகளின் படி போலிசார் அழைத்தால் அது சம்பந்தமாக சென்று வந்தால் அதை குறித்து உயர் அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்றால் சரியல்ல. வாய்மொழியாக தகவல் சொல்வேன். எழுத்துமூலமாக அறிக்கை கொடுக்கவேண்டுமென்றால் இதுவரை கேட்டதில்லை. தாசில்தார் எழுத்துமூலமாக உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை. வாய்மொழியாக தான் கொடுத்தார். என்னிடம் காட்டபடும் ஒப்புதல் வாக்குமூலங்களிலோ அல்லது மகசர்களிலோ எந்த உத்தரவின் அடிப்படையில் விசாரணைக்கு ஆஜராகி கையொப்பம் செய்தேன் என்று குறிப்பிட்டு கையொப்பம் செய்யவில்லை. 4 நாள்கள் விசாரணைக்காக நான் சென்று வந்தேன். ஒவ்வொரு முறையும் தாசில்தாரிடம் ஆய்வாளர் கடிதம் கொடுத்தின் படிதான் சென்றேன் என்றால் சரிதான். ஆய்வாளரிடம்பெறப்பட்ட கடிதம் இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படவில்லை. எங்கள் அலுவலகத்தில் வரவு தபால்களுக்கான பதிவேடு பராமரிக்கப்படுகிறது. அந்த பதிவேடு நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படவில்லை. நான் சி பி சி ஐ டி அலுவலகம் செல்லும்போது அங்கு எதிரிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போவதற்கு முன்பு என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது. நான் சி பி சி ஐ டி அலுவலகம் சென்றபோது, என்னை பரிசோதனை செய்து என்னிடம் எந்த பணமும் இல்லையென்று அவர்களை பரிசோதனைக்குட்படுத்தி அவர்களிடம் எந்த பணமும் இல்லையென்று உறுதிபடுத்தி கொண்டேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில், காண்பித்த அனைத்து கையொப்பங்களும் ஒரே நாளில் சி பி சி ஐ டி அலுவலகத்தில் போட்டேன் என்றாலும், எனக்கு சம்பவத்தை பற்றி எந்தவிபரமும் தெரியாது என்றாலும், அதனால் தான் நான் முறையான விதிமுறைகளை கைப்பற்றவில்லையென்றாலும் சரியல்ல.

10 மற்றும் 12 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

6 மற்றும் 8 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

நான் சி பி சி ஐ டி அலுவபலகம் சென்றபோது என்னுடன் 3 அல்லது 4 நபர்கள்

வந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் இரண்டு நபர்கள் மட்டும் தான்போனோம். மதன் என்கிற மதன்ராஜ் எந்த முறையில் சி பி சி ஐ டி அலவலகத்தில் இருந்து அழைத்து வரபட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி மதன் (எ) மதன்ராஜ் என்பவர் மூலமாக சான்றுபொருள் கைப்பற்றப்படவில்லையென்றால் ஞாபகம் இல்லை. சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு இந்த வழக்கு அல்லாத வேறு வழக்கு சம்பந்தமாக நான் போனது இல்லை. எதிரி மதன்ராஜ் என்பவரிடம் என் முன்பாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு சேட்டு (எ) ஜீவானந்தம் என்பவர் எந்த முறையில் சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு கொண்டு வரபட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சேட்டு எனக்றி ஜீவானந்தம் என்பவர் மூலம் எந்த சான்றுபொரு ளும்கைப்பற்றப்படவில்லையென்றால் சரிதான். என் மூலமாக காண்பிக்கபட்ட ஆவணங்கள் அனைத்தும் நான் ஒரே நாளில் கையொப்பம் செய்தேன் என்றாலும், வழக்கிற்கு வலு சேர்ப்பதற்காக மேற்படி ஆவணங்கள் பொய்யாக புனைப்பட்டது என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் வருகை பதிவேடு உள்ளது. அதைபோன்று Movement Register உள்ளது. சி பி சி ஐ டி அலுவலகம் சென்ற விபரத்தை Movement Register ல் பதிவு செய்தேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் எந்த விபரமும் பதிவு செய்யவில்லையென்றாலும், ஞாபகம் இல்லையென்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (எதிரி அந்தோணி செல்வம் )</u>**

சி பி சி ஐ டி அலவலகத்தில் பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை நான் பார்த்தேன். அந்த வேண்டுகோள் கடிததத்தில் என் பெயர் குறிப்பிட்டு என்னை அனுப்ப சொல்லி கேட்கபட்டதா என்றால் இல்லை. அந்த வேண்டுகோள் கடிதம் தாசில்தாருக்கு எழுதபட்டது. ஆய்வாளர் நேரிடையாக வந்து தாசில்தாரை பார்த்து கடிதத்தை கொடுத்தார். நான் கடிதம் கொடுத்ததை பார்க்கவில்லை. தாசில்தார் என்னிடம் சொன்னார். 26.9.2014ந் தேதியன்று ஆய்வாளர் வந்தார். எத்தனை மணிக்கு வந்தார் என்று தெரியவில்லை. 26.9.2014ந் தேதி மாலை 4.00 மணிக்கு என்னை சி பி சி ஐ டி அலுவலகம் செல்லுமாறு தகவல் சொன்னார்கள். என்னையும், அருண்

என்பவரையும் போக சொன்னார்கள். நான் சம்பவ குறித்து சொன்ன விபரங்கள் ஞாபகத்தின் அடிப்படையில் சொன்னேன். என் அலவலகத்தில் இருந்து சிபிசிஐடி அலுவலகத்திற்கு என்னுடைய இரு சக்கர வாகனத்தில் சென்றேன். அது Mestro ஆகும். அந்த வண்டியில் நான் மட்டும் தான் போனேன். அந்த வாகனத்தின் எண் டி என் 12 டி 3768 ஆகும். அருண் என்பவர் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வந்தார். அவர் என்னுடன் வந்தாரா என்றால் இல்லை. நாங்கள் தனித்தனியாக தான் போனோம். 26ந் தேதி அலுவலகத்திற்கு வந்து கடிதத்தை கொடுத்தார்கள். நான் சிபிசிஐடி அலுவலகம் சென்றபோது அருண் என்பவர் என் பின்னால் வந்தார். சிபிசிஐடி அலவலகத்திற்கு நான் 12.00 மணிக்கு போனேன். 27ந் தேதி அருண் என்னுடன் வரவில்லை. 27ந் தேதி ஜெயபால் என்பவர் தான் வந்தார். ஜெயபால் அலுவலகத்திற்கு எப்படி வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் சிபிசிஐடி அலுவலகம் சென்றபோது கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. யாரையும் பார்க்கவேண்டுமென்று தெரியாது என்றால் சரியல்ல. ஆய்வாளரை பார்த்தேன். சி பி சி ஐ டி அலுவலகத்தில் நான் சென்று குற்ற எண்ணை சொல்லி கேட்டேன். அலுவலகம் தரைதளத்தில் உள்ளது. சிபிசிஐடி வழக்கு சம்பந்தமாக நான் 2 வழக்குகளில் சாட்சியாக இருந்துள்ளேன். நான் சிபிசிஐடியின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. வழக்கை பற்றி எனக்கு தெரியாது என்றாலும், போலிசார் கூறியதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கூறிய 4 நாட்கள் தவிர, வேறு நாட்களில் நான் சிபிசிஐடி அலுவலகம் போகவில்லை.

**3 , 4 , 7 மற்றும் 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் எதிரிகள் லட்சமணன் பாஷா ஆகியோர் எப்படி கொண்டவரபட்டார்கள், எங்கிருந்து கொண்டு வரபட்டார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதை குறித்த விபரங்களை நான் ஆய்வாளரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். வழக்கு சம்பந்தமாக எத்தனை காவல்நிலையத்தில் இருந்து விசாரித்தார்கள் என்றால்என்னை யாரும் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டபடும் ஆவணங்கள் அனைத்தையும் சிபிசிஐடி அலுவலகத்தில்வைத்து தான் ஆய்வாளர் முன்னிலையில் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. சிபிசிஐடி அலுவலகம் தவிர, வேறு எங்கேயும் விசாரணைக்கு போகவில்லையென்றால் சரியல்ல. என்ன தேதி எத்தனை மணிக்கு அயத்பாஷா மற்றும் லட்சமணன் ஆகியோரிடம் ஒப்புதல் வாக்குமூலம்

வாங்கபட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், போலிசார் கேட்டு கொண்டதின் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லட்சுமணன் என்பவரிடம் எந்த பொருளும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லையென்றால் தவறு. போலிசாருக்கு பவ்வியபட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. மதிவாணன்
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.

**08/08/2019.**

**S.C.No.110/2019** **PW** Tr. மதிவாணன்

**முதல் விசாரணை**

நான் நாகபட்டினத்தில் குடியிருக்கிறேன். 27.10.2014ந்தேதி நானும், என் நண்பர் குபேந்திரன் என்பவரும் வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கு சென்று இருந்தோம். கோவில் இருந்து வெளியே வந்தபோது, எம் ஆர்எஸ் லாட்ஜ் இருந்தது. அந்த லாட்ஜின் எதிர்புறம் ஒரு குயஉேல ளுவடிசந இருந்தது. சி பி சி ஐ டி போலிசார் அங்கு ஒரு நபரை கைது செய்து கொண்டிருந்தார்கள். சி பி சி ஐ டி போலிசார் என்னிடம் ஒருவரை கைது செய்து இருக்கிறோம். அவர் பெயர் அந்தோணிதாஸ் என்றும், அவர் வாக்குமூலம் கொடுக்க போவதாக சொன்னாாகவும், அதற்கு நீங்கள் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள்., நானும் எனது நண்பர் குபேந்திரன், என்பவரும் ஒப்பு கொண்டோம். அதன்பின்பு சம்பவத்தை பற்றி சொன்னார். அவர் சென்னைக்கு அவரது நண்பர் செல்வம் வீட்டிற்கு போனதாகவும், அங்கு நண்பர்கள் 6 பேருடன் பாலகுமார், சிவகுமார், சேட்டு, லட்சமணன் ஆகியோர் சேர்ந்து தூத்துகுடியில் ஏதோ ஆலயத்தில் Copper வடநாட்டிற்கு போவதை அதை எதோ கடத்தி வைத்தால் பணம் கிடைக்கும் என்று ஆக்ஸட் முதல் வாரம் திட்டமிட்டதாகவும் செப்டம்பர் முதல் வாரம் 2ந் தேதி ஆலயலிருந்து ஒரு லாரி சென்றதாகவும், 2 முதல் 3 தேதி வரை லாரியை பின் தொடர்ந்து 3ந் தேதியன்று திண்டுக்கல் ரோட்டில் லாரியை தடுத்து நிறுத்தியதாகவும், அதின் ஓட்டுநர் சவுக்தலி என்பவரை கடத்தி அழைத்து சென்றதாகவும், அவரை கடத்தி விராக்கன்நாயக்கன் பட்டியில் அடைத்து வைத்திருந்ததாகவும், அவரிடம் ரூ.10,000 அடித்து வாங்கியதாகவும், 4ம் தேதி மாலை டிரைவரை ஓசூர் ரயில்நிலையம் இறக்கிவிட்டதாகவும், அங்கிருந்து வேளாங்கண்ணிக்கு போனதாகவும், அங்கே பேன்சி ஸ்டோரில் வேலைக்கு சேர்ந்ததாகவும், அதன்பின்பு தான் போலிசார் கைது செய்ததாகவும் கூறினார். அதை அவர் சொன்னதை போலிசார் மடிகணிணியில் பதிவு செய்ததாகவும், அவர்

வைத்திருந்த பிரண்டரை வைத்து பிரிண்ட் எடுத்து என்னிடமும் , குபேந்திரன் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அந்தோணிதாஸ் என்பவரையும், என்னையும் குபேந்திரன் என்பவரையும் அழைத்து கொண்டு நாகபட்டினம் புத்தூர் மெயின்ரோட்டில் நிசாம்உதின் என்பவரின் ஆர்ட் மிடியா என்ற அலுவலகத்தில் போனவுடன் அந்தோணிதாஸ் ஆர் டி ஓ என்று ஏபதபட்ட சிவப்பு நிற ஸ்டிக்கர் ஒன்று, நீலமும், வெள்ளையும் கலந்த துண்டு ஒன்று மற்றும் மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று, ஆகியவற்றை நிசாம்உதின் என்பவருக்கு தெரியாமல் அவரது அலுவலகத்தில் வைத்து இருந்தார். அதை எடுத்து காட்டினார். அதை பார்த்தபோது சாட்சியாக ஒரு பேப்பரில் எழுதி போலிசார் என்னிடமும், குபேந்திரனிடமும் கையொப்பம் வாங்கினார். போலிசார் விசாரித்து ஒரு பேப்பரில் எழுதி கொண்டார்கள். என்னிடம் காட்டபடும் எதிரி அந்தோணிதாஸ் என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொபப்ம் மட்டும் அசாஆ 18 ஆகும். எதிரி அந்தோணிதாஸ் சம்பந்தபட்ட கைப்பற்றுதல் மகசர் அசாஆ 19 ஆகும். நீதிமன்றத்தில் இருக்க கூடிய துண்டு, கத்தி மற்றும் ஆர் டி ஓ ஸ்டிக்கர் என் முன்பாக கைபப்பற்றபட்ட பொருள்கள் தான். அது ஏற்கனவே சாபொ 3, 4, மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சென்னையிலுள்ள சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு இந்த வழக்கு சம்பந்தமாக நான் எப்போதும் வந்தது இல்லை. சாட்சி நிசாரூதின் என்பவரை எனக்கு தெரியாது. நிசாருதின் அலுவலகத்தில் உரிமையாளர் என்ற முறையில் தான் எனக்கு தெரியும். அதற்கு முன்பு எனக்கு தெரியாது. நிசாரூதின் என்பவர் அலுவலகத்தில்எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதேபோன்று, எத்தனை மணிக்கு அவர்கள் அலுவலகம் திறக்கப்படும் எப்போது மூடப்படும் என்ற விபரம் எனக்கு தெரியாது. 27.10.2014ந் தேதியன்று 10.00 மணிக்குமேல் தான் ஒப்புதல்



வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னை தவிர்த்து அந்த இடத்தில்பொது நபர்கள் நாளைந்து பேர்கள் இருந்தார்கள். போலிசார் நாளைந்து பேர்

சீருடை அணியாமல் இருந்தார்கள் என்றால்சரிதான். எந்தெந்த போலிசார் எந்தெந்த ரேங்க் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் இருந்தார் என்பது எனக்கு தெரியும். இரவு 10.00 மணி முதல் 12.30 மணி வரை போலிசாருடன் இருந்தேன். அதன்பின்பு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். 10.00 மணிக்கு நான் சென்றபோது அங்கு நிசாரூதின் என்பவர் இல்லை. 12.00 மணிக்குமேல் நிசாரூதின் என்பவர் அலுவலகம் திறக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அலுவலகத்தில் எதிரி அந்தோணிதாஸ் தான் திறந்தார். சாவி அவரிடம் இருந்ததா என்பது எனக்கு தெரியவில்லை. இரவு 12.00 லிருந்து 12.30 மணிக்குள் நிசாரூதின் அலுவலகத்திற்கு வந்திருப்பார். நிசாரூதின் அலுவலகத்தில் ஒரு டேபளின் கீழ் நான் சொல்லகூடிய பொருட்களை எடுத்து எதிரி ஆஜர் செய்தார். அப்பொருட்களை எடுக்கும்போது நிசாரூதின் அலுவலகத்தில் இருந்தார் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் படித்து பார்த்தேன். கைப்பற்றுதல் மகசரில், சான்றுபொருட்கள் நிசாரூதின் அலுவலகத்தில்டேபளின் அடியில் இருந்து எடுக்கபட்டது என்று குறிப்பிடவில்லையென்றால் ஞாபகம் இல்லை. நிசாரூதின் என்பவரிடம் கையொப்பம் பெறப்பட்டதா என்று எனக்கு தெரியாது. போலிசார் வந்த வேனில் வைத்து தான் டைப் செய்தார்கள். 27.10.2014ந் தேதியிக்கு முன்பாக போலிசார் சிபிசிஐடி போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நிசாரூதின் குபேந்திரன் என்பவர்களுடன் வழக்கு சம்பந்தமாக 27.10.2014ந் தேதியன்று விசாரணை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. எதிரி அந்தோணிதாஸ் நிசாரூதின் என்பவரின் அலுவலகத்தில் எத்தனை ஆண்டுகாலம் வேலை செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதே விபரத்தை தான் போலிசு விசாரணையின் போது கூறியுள்ளேன். போலிசு விசாரணையின் போது கைப்பற்றபட்ட கத்தி மரக்கைப்பிடியுடன் கூடியது என்று சொல்லியிருக்கிறேன். போலிசு விசாரணையில் அவ்வாறு எந்த விபரமும் சொல்லவில்லையென்றாலும்,



வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் கைப்பற்றபடவில்லையென்றால் சரியல்ல. நான் சொன்ன

நேரத்தில் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லையென்றால் சரியல்ல. என் முன்பாக சாட்சி நிசாரூதின் என்பவரை  சிபிசிஐடி போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லையென்றால் தெரியவில்லை.  வழக்கை பற்றி எனக்கு தெரியாது என்றாலும், போலிசாருக்கு பவ்வியபட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அனைத்து ஆவணங்களையும் அலுவலகத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**<u>IN THE COURT OF THE  I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR</u>**

**<u>SESSIONS CASE NO.  228/2018</u>**

Deposition of Witness for Prosecution

Defence PW 14

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. நிசாரூதின்
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.

..2...

**08/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 14 Tr. நிசாருதின்

**முதல் விசாரணை**

நான் வேளாங்கண்ணியில் குடியிருந்து வருகிறேன். என் குடும்பத்துடன் அங்கு தான் வசித்து வருகிறேன். நான் பி இ மெக்கானிக் படித்துள்ளேன். தற்போது சிவில் ஓர்க் பார்த்து வருகிறேன். இதற்கு முன்பு Art Media பூமாலை காம்பளக்ஸ் , மெயின் ரோடு, வேளாங்கண்ணி என்ற முகவரியில் கடை வைத்திருந்தேன். நான் New Royal Engineering College படித்து வந்தேன். அப்போது Canteen ல், சப்ளையராக அந்தோணிதாஸ் வேலை செய்தார். College படிப்பு முடித்து

நான் வெளியே வந்துவிட்டேன். என்னுடைய கைபேசி எண்.8973543409 ஆகும். என்னுடைய கைபேசி எண்ணிற்கு போன் செய்து வேளாங்கண்ணி சர்ச்சியிடம் நிற்பதாக அந்தோணிதாஸ் சொன்னார். சர்ச் அருகில் எம் ஆர் எஸ் லாட்ஜ் எதிரில் செபஸ்டிக் பேன்சி ஸ்டோரில் வேலை செய்வதாக என்னிடம் சொன்னார். 27.10.2014ந் தேதியன்று சிபிசிஐடி ஆய்வாளரிடம் இருந்து எனக்கு இரவு போன் வந்தது. என்னுடைய அலுவலகத்திற்கு வர சொன்னார்கள். அங்கு அந்தோணிதாஸ் மற்றும் போலிசார் இருந்தார்கள். அப்போது, அந்தோணி தாஸ் அலுவலகத்தை காண்பித்து , இந்த பில்டிங்குள் தான் கடத்தல் பொருள் வைத்திருக்கிறேன் என்று சொன்னார். நான் ஆய்வாளரிடம் என்ன என்று கேட்டபோது அந்தோணிதாஸை கைது செய்வதாக சொன்னார். முதலில் பில்டிங்கை என்னை அலுவலகத்தை திறக்க சொன்னார்கள். உள்ளே சென்று பார்த்தபோது பைல் வைத்திருக்கும் டேபளின் கீழ் ஒரு கவரில் அந்தோணிதாஸ் எடுத்தார். அப்போது தான் அதில் என்ன இருந்தது என்பதை காண்பித்தார்கள். அதில் கத்தி, சிகப்பு கலர் ஆர் டி ஓ ஸ்டிக்கர் , நீலம் மற்றும் வெள்ளை நிற துண்டு ஒன்று இருந்தது. அப்போது மதிவாணன், குபேந்திரன் ஆகியோரை அழைத்து வந்தார்கள். அவர்களிடமும் காண்பித்தார்கள்.



அதன்பின்பு என்னை தனியாக அழைத்து விசாரித்தார்கள். அப்போது நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை கூறினேன். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது ஆர்த் மிடியா கம்பெனியில் கணிணியின் மூலமாக வேலைகள் செய்வேன். நீதிமன்றத்தில் இருக்க கூடிய கத்தி ஆர்த்தடிக் பணிக்கு நான் பயன்படுத்தும் கத்தி என்றாலும், போலிசார் கேட்டு கொண்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கம்பெனியில் ஸ்டிக்கர் மற்றும் போர்டு தயாரிக்கும் வேலை செய்து வருகிறேன் என்றாலும், நீதிமன்றத்தில் இருக்க கூடிய ஸ்டிக்கர் போலிசார் வேண்டுகோளின் பேரில் நான் தயாரித்து கொடுத்துள்ளேன்

என்றால் சரியல்ல. என்னுடைய கைபேசியை போலிசார் கைப்பற்றவில்லை. என் சொந்த ஊர் வேளாங்கண்ணி போலிசார் என்னை போன் மூலமாக அழைத்து எனது அலுவலகம் வர சொன்னார்கள். சான்றுபொருட்கள் file டேபிளின் கீழ் வைத்து எடுத்தார்கள். சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து போலிசு விசாரணயில் கூறியுள்ளேன்என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR</u>**

**<u>SESSIONS CASE NO. 228/2018</u>**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. ராஜா
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.



**08/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 15 Tr. ராஜா

**முதல் விசாரணை**

நான் சென்னை வளசரவாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். என் சொந்த ஊர் மதுரை மேலூர் உள்ள கண்மாய்பேட்டை. 3ம் தேதி யன்று என்னுடன் மாதம் வருடம் சரியாக ஞாபகம் இல்லை. என்னுடைய அக்கா பையனுக்கு கல்யாணம் என்பதால் என்னுடன் மதன்ராஜ் என்பவரை கூட்டி சென்றேன். அப்போது வரவேற்ப் நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். வரவேற்பு நிகழ்ச்சி முடிந்தவுடன் வேலை உள்ளது என்று அவர் கிளம்புகிறேன் என்று சொன்னார். நான் அவரை இருக்க சொன்னேன். இல்லை கிளம்பவேண்டுமென்று சொல்லி கிளம்பிவிட்டார். 2 நாட்களுக்கு பின்பு எனக்கு அவர் போன் செய்தார். வழக்கில் என்னை தேடுவதாக

கூறினார். என்னவென்று தெரியவில்லை. வழக்கில் இருக்கிறேன் என்று சொன்னார்., நான் நீதிமன்றத்தில் சரணடைந்துவிடுங்கள் என அறிவுறைசொன்னேன். இவ்வழக்கு சம்பந்தமாக சிபிசிஐடி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>10 மற்றும் 12ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 ம் தேதி 3 மற்றும் 4 மாதங்களுக்கு பின்பு சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால்சரியாக ஞாபகம் இல்லை. அதற்கு முன்பாக வேறு எந்த போலிசாரும் என்னை விசாரிக்கவில்லை. மதன்ராஜ் என்ன வழக்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யாரால் இந்த வழக்கு எப்போது போடப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலிசு விசாரணையில் நான் சொன்னேன். வேறு விபரங்கள் எதுவும் சொல்லவில்லை.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. உசேன்சரிப்
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.

**08/08/2019.**

**S.C.No.110/2019** ______ **PW** Tr. உசேன்சரிப்

**முதல் விசாரணை**

நான் தற்போது போரூரில் குடியிருந்து வருகிறேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கிரேன் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். நான இராமபுரத்தில் இந்துமதி கிரேன் சர்வீஸில் வேலை செய்து வருகிறேன். முதலாளி பெயர் இந்துமதி. மாத சம்பளம் எனக்கு தற்போது ரூ.7,000/. ஆகும். ஓனரம்மா எனக்கு போன் செய்து குடோனுக்கு வேலைக்கு செல்லவேண்டுமென்று சொன்னார்கள். என்றைய தேதி சொன்னார்கள் என்று ஞாபகம் இல்லை. நான் போய்விட்டு அங்கு 2மணி நேரம் வேலை செய்தேன். அங்கு இருந்த பாண்டல்களை இறக்க சொன்னார்கள். அது பிளேட்டா இல்லையா என்று தெரியவில்லை. அது ஒரு Scrap குடோன். மை கம்பெனிக்கு பக்கத்தில் உள்ள Scrap குடோன் ஆகும். டிரேயலரில் பிளேட் வந்தது. அந்த பிளேட்டில் Copper பிளேட்டா என்று எனக்கு தெரியவில்லை. வாடகை பணம் ரூ.1,100/ ஓனரிடம் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்பு சிபிசிஐடி போலிசார் என்னை அழைத்தார்கள். பொருட்களை இறக்கினேனா என்று விசாரித்தார்கள். அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். பிரவுன் கலர் டிரையலரும் ஒயிட் கலர் இன்சினும்இருந்த லாரியாகும். திறந்த டிரைலர் போல் இருந்தது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

லோடை ஏற்றி இறக்கும்போது அது சம்பந்தமான சிலிப் (Slip) எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. போலிசாருடன் எனது கனரக வாகனம் ஓட்டுநர் உரிமத்தை காண்பித்தேன். கிரேன் ஓட்டுவதற்கு டிரிப் ஷீட் பராமரிக்கவேண்டுமென்றால் சரிதான். அது என்னிடம் உள்ளது. ஆனால் என்னை கேட்கவில்லை. ஒரு நாளைக்கு சுமார் நாளைந்து முறை லோடுகள் ஏற்றி இறக்குவேன். அன்றைய தினம்

எந்தெந்த இடங்களில் சென்று லோடை ஏற்றி இறக்கினேன் என்று போலிசு விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் என்கைபேசி எண்ணை கேட்கவில்லை. எனது கைபேசியை வாங்கி பார்க்கவில்லை.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tmt. Indumathi
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.



**08/08/2019.**

**S.C.No.110/2019** ______ **PW** Tmt. Indumathi

**முதல் விசாரணை**

நான் இராமபுரத்தில் குடியிருக்கிறேன். என் கணவர் இறந்துவிட்டார். என் கணவர் கிரேனை வாடகைக்கு விடும் தொழில் செய்து வந்தார். அதை நான் தொடர்ந்து செய்து வருகிறேன். போனில் யார் கூப்பிட்டு வண்டியை அனுப்ப சொன்னாலும்

அனுப்பிவிடுவேன். மற்றபடி வேறு எதுவும் எனக்கு தெரியாது. வண்டி வாடகைக்கு மட்டும் பேசுவோம். மற்ற படி வண்டி எந்த லோடு அனுப்பபடுகிறது என்று கேட்கமாட்டேன். போனில் வண்டியை கேட்பார்கள். யார் என்னவென்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக வேறு விபரம் எனக்கு தெரியாது.

(கற்றறிந்த வழக்கறிஞர் அனுமதியின் சாட்சியம்அழைக்கபட்டு அனுமதியின் பேரில் அழைக்கப்பட்டு அனுமதி கோரபட்டது)

எனது அலுவலகத்தின் தொலைபேசி எண்.9962905458, 9444241506 ஆகும். என் அலுவலகத்தின் உசேன் என்ற ஓட்டுநர்களும், மற்ற ஓட்டுநர்களும் இருக்கிறார்களும் இருக்கிறார்கள். விஜயமோகன் என்பவர் செல்போன் மூலமாக 4.12.2014ந் தேதியன்று கிரேன் வேண்டுமென்று எனக்கு போன் முலம் கேட்டார்களா என்றால் யார் போன் செய்தார்கள் என்ற எனக்கு தெரியாது. எந்த தேதியன்று எனக்கு ஞாபகம் இல்லை. ஐடக்ஸ் கம்பெனி அருகில் கிரேனை அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள். மற்ற விபரம் எனக்கு தெரியாது. ஓட்டுநர் என்னிடம் அவர் எங்கு சென்றுவிட்டு வந்தேன் என்று சொல்லவில்லை. எவ்வளவு நேரம் வேலை செய்தார் என்று சொல்லவில்லை. Minimum வேலை செய்ததாக சொல்லியுள்ளார். சிபிசிஐடி அலுவலகத்தில் என்னை விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொன்ன அதே தான் போலிசு விசாரணையிலும் சொன்னேன். வண்டி எண். டி என் 20 எ எக்ஸ் 0234 ஆகும். எதிரிகள் கேட்டுகொண்டதிற்கிணங்க எதிரிகளுக்கு பவ்வியபட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Panidasan
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the

day 08th day of August 2019.



**08/08/2019.**

**S.C.No.110/2019** **PW** Tr.Panidasan

**முதல் விசாரணை**

• ஆழ்வார் திருநகர், அண்ணா சாலை, சென்னை 87 என்ற விலாத்தில் குடியிருந்து வருகிறேன். மேற்சொன்ன முகவரியில் 2 கடைகளும், வீடும் உள்ளது. அதில் ஒரு கடையில் அழகு நிலையத்திற்கு வாடகைக்கு விட்டிருக்கிறேன். மற்றொரு கடை காலியாக இருந்தது. ரோஷன் என்பவர் கடையை வாடகைக்கு கேட்டார். நான் அவரிடம் என்ன கடை வைக்கபோகீறிர்கள் என கேட்டேன். அதற்கு அலுவலகம் ஒன்று வைக்க போவதாக சொன்னார். சாலிகிராமம் மற்றும் கோடம்பாத்தில்அவரின் குடோன் இருப்பதாக என்னிடம் சொன்னார். PIN எடுப்பதற்கு அலவலகம் தேவையென சொன்னார். நான் சரியென்று ஒப்பு கொண்டு ரூ.10,000 முன்தொகையாக பெற்றுக் கொண்டு மாத வாடகையாக ரூ.2,000 என பேசினேன். 3.1.2014ந் தேதியன்று தான் அங்கிரிமெண்ட் ஒன்றை கொண்டு வந்து என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார். அந்த கடைக்கு அவர்எப்போதாவது வருவார். அந்த கடை எப்போதும் பூட்டி தான் இருக்கும். கடையில் Sam Enterprises என்ற பெயர் பலகை இருக்கும். கடிதங்கள் ஏதேனும் வந்தால் அதை எடுத்து கொண்டு போவார். ஒரு முறை சேல்ஸ் டேக்ஸ் அலுவலர்கள் ஏன் கடை பூட்டபட்டிருந்தது என்று என்னிடம் வந்து விசாரணை செய்தார்கள். உரிமையாளரின் தொலைபேசி எண் பெயர் பலகையில் இருக்கும் அதை பார்த்து தொடர்பு கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுவேன். அவர் எவ்வாறு அலுவலகத்தை நடத்தி வந்தார் என்று எனக்கு தெரியாது. மாத வாடகையை என்னிடம் கொடுத்து வந்தார். ஒருநாள் சிபிசிஐடி போலிசார் என்னிடம்

வந்து என்னுடைய கடையா என விசாரித்தார்கள். நான் என்னுடைய கடை அல்ல என்றும், ரோஷன் என்பவரின் கடை என்று சொன்னேன். ரோஷன் என்வரின் தொலைபேசி எண்ணை கொடுத்தேன். அவரை விசாரித்து விடுவோம் என்றும்,



தேவைப்பட்டால் அழைக்கிறோம் என்று போலிசார் என்னிடம் சொன்னார்கள். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். 25.10.2014ந் தேதியன்று எக்மூர் சிபிசிஐடி அலவலகத்திற்கு வர சொல்லி வாக்கமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கடையின் உரிமையாளர் என்பதைகாண்பிக்கும் போலிசாரிடம் ஆவணம்எதுவும் கொடுக்கவில்லை. ஒப்பந்த பத்திரம் கேட்டார்கள் என்னிடம் இல்லையென்பதால் கொடக்கவில்லை. வருமான வரி கணக்கு வாடகை வருமானம் காண்பிக்கிறேன் என்பதை காட்டும் வகையில் வருமான வரி ஆவணம் எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை. சேல்ஸ் டேக்ஸ் அலுவலகத்தில் கடை சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் வீடும் கடையையும் போலிசார் புகைபடம் எடுத்தார்கள். அதை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கவில்லையென்றால்சரிதான். நான் சொல்லும் சாட்சியத்திற்கும் புகைபடங்களுக்கும் வேறுபாடு உள்ளதால் தான் அதை காண்பிக்கவில்லையென்றால் சரியல்ல. சொல்லகூடிய கடை எனக்கு சொந்தமானது அல்ல என்றாலும், அதனால் தான் அது சம்பந்தபட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் காண்பிக்கவில்லையென்றால் சரியல்ல. போலிசு வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Roshan Philip
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 08th day of August 2019.

**08/08/2019.**

**S.C.No.110/2019** **PW** 19 Tr. Roshan Philip

**முதல் விசாரணை**

நான் சென்னையில் ஆழ்வார் திருநகரில் குடியிருக்கிறேன். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் டான் போஸ்க் பள்ளியில் படித்தேன். 2005 முதல் 2015 வரை ரிச் உட்ண்ஸ் என்ற Furniture Show Room வைத்து இருந்தேன். அப்போது, வியபாரம் சரியாக நடக்கவில்லையென்பதால் 2013 அக்டோபர் மாதம் வேறு ஏதாவது ழயசனறயசந தொழில் ஆரம்பிக்கலாம் என்று ஒரு கடை ஆழ்வார் திருநகர், காந்திரோடு எடுத்தேன். அதற்கு ரூ.2,500 வாடகையும் ரூ.10,000 முன்தொகையாகவம் கொடுத்தேன். அந்த கடைக்கு Sams Enterprises என்ற பெயரில் OIN பெற்றேன். ரிச் உட்ர்ஸ் என்ற கடை என் பெபயரில் இருந்ததால் என் அண்ணன் Babu Philip என்ற பெயரில் ஆரம்பித்தேன். நிறுவனத்தின் பெயர் Sam Enterprises என்று வைத்தேன். பணப்பிரச்சனை காரணமாக அந்த கடையை என்னால்திறக்கமுடியவில்லை. அந்த கடை மூடியே இருந்தது. என்னுடைய பங்குதாரரின் ஆலோசனையின் பேரில்அவருடைய நண்பர் சந்திரன் என்பவர் அறிமுகம் செய்து வைத்தார். அவரிடம் பொருட்களை கடனுக்கு பெற்று வியாபாரம் செய்ய ஆலோசனை கொடுத்தார். மேற்படி சந்திரன் என்பவராலும் என் வியாபாரத்திற்கு உதவ முடியவில்லை. அக்டோபர் மற்றும் நவம்பரில் வியாபாரம் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் நிறுவனத்தை மூடுவதற்கு ஏற்பாடு செய்தேன். அதன் இடையில் 2 மற்றும் 3 முறை அவரிடம் கைம்மாற்றாக பணம் பெற்று திருப்பி கொடுத்து உள்ளேன். சரியாக தேதி ஞாபகம் இல்லை. இடையில் ஒரு முறை சிபிசிஐடி அலுவலகத்திற்கு என்னை அழைத்துவிசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை கூறினேன். பின்பு Sam Enterprises என்ற பெயரில் ஒரு Invoice ஐ என்னிடம் காண்பித்தார்கள். அதில் யார் தயாரித்த பில் என்று என்னிடம் கேட்டார்கள். நான் அப்போது கம்பெனி திறக்கவேயில்லையென்று

அது சம்பந்தமாக Visiting Card கூடி அடிக்கவில்லையென்று சொன்னேன. அதில் இருக்கும் தொடர்பு எண் யாருடையது என்று கேட்டார்கள். என்னுடையது இல்லையென்று சொல்லவிட்டேன். அதில் ஆங்கிலத்தில் எழுதபட்டிருந்தது. Invoice ல் என்ன எழுதபட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. அதில் இருந்த கையெழுத்தும் என்னுடையது அல்ல. நீதிமன்றத்தில் இருக்க கூடிய Invoice என்னிடம் சிபிசிஐடி அலுவலகத்தில் காண்பிக்கபட்டது என்று சாட்சி சொல்கிறார். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Sd/-Deepthi Arivunithi

Taken to my dictation and corrected
by me to open court read over to the witness
and admitted by him as correct.

Sd/-Deepthi Arivunithi
I Addl.Dist.Judge,
I Additional District court,
Tiruvallur.